www.tamilarangam.net

# தமிழ் முரசு



## தி. உமாகாந்தன்
## 1956 – 2004

www.tamilarangam.net



நம் கண்முன்னே
வாழ்ந்து சிதைந்துபோன
ஒரு தோழனின் கொடுந்துயரிது.

வாழ்விற்கு கனம் சேர்ப்போர் சிலர்
அவர்களுள் ஒருவராய் ...
தோழர் உமா காந்தன்.

கணீரென்ற குரல்
கவர்ச்சிமிக்க பேச்சு
சோர்வில்லா எழுத்து
கொண்ட கொள்கையில் உறுதி
அனைத்திற்கும் விடைகொடுத்தாய்.

மறைந்தும் மறையாது
எம்முள்வாழும் தோழனுக்கு
தலைதாழ்த்தி
எங்கள் இறுதி வணக்கம்

இலக்கிய நண்பர்கள் சார்பாக
மனோ

www.tamilarangam.net

# நினைவுகளாய்....



மரணத்தின் பின்பான
உன் நினைவுகள்
எம் புகலிட வரலாற்றில்
தொலைந்து போகாப் பதிவுகள்

எரியும் எம் குஞ்சுத் தீவின்
சிறுபான்மை இனத்தவர்களின்
சமூக அரசியல் விடிவுக்காய்
தமிழ் முரசு சஞ்சிகையின்
ஆசிரியனாய் போராடப்
பணிபுரிந்தது; நினைவுகளாய்...

கொலை செய்யப்பட்ட
சபாலிங்கத்தின் இறுதிச்
சடங்கில் கொலை வெறியர்களைச் சாடிய
உன் குரல்; நினைவுகளாய்...

சர்வதேச அர-அதிகார-ஆதிக்க
வெறியர்களால் சிறுபான்மை இன மக்கள்மீது
மேற்கொள்ளப்பட்ட கொலைகள், மற்றும்
அரசியல் விரோதங்களை அம்பலப்படுத்திய
உனது கட்டுரைகள்; நினைவுகளாய்...

சர்வதேசச் செய்திகள் - அனைத்தையும்
உன் சுண்டுவிரல் விழிம்புவரை வைத்திருந்தும்
தமிழ் மீடியா வியாபாரிகளிடம்
விலைபோகாத உன் தனித்துவம்; நினைவுகளாய்..

இறுதியான உன் உணர்வுப் பதிவாகிப்போன
`யுத்தம் யாருடனும் செய்யலாம்
புத்தகம் யாரும் வெளியிடலாம்
ஆனால் எழுத்து எந்த நேரமும்
இறுக்கமாக இதயத்தில் இருக்கும்`
எமது தோழர்கள் எமது நண்பர்கள் அப்படித்தான்`
எம்முள் தொலைந்துபோகா நினைவுகளாய்..
உன் நினைவுகள் `இறுக்கமாக இதயத்தில் இருக்கும்`
- அசுரா-

www.tamilarangam.net



## நினைத்துப் பார்க்கிறேன்....!

## தோழனே.......

1983ல் அந்த இலை துளிர் காலத்தில், காலைப் பொழுதினில் உன்னை முதன் முதலில் தமிழ் ஈழ விடுதலைப் பேரவை அலுவலகத்தில் பார்க்கிறேன். வணக்கம் சொல்லி வரவேற்கிறாய். இருவரும் கைகளைக் குலுக்கிக் கொள்கிறோம். உறவின் ஆரம்பம் அது. 2004ல் இலையுதிர் காலத்தின் மாலைப் பொழுதில் ஒரு பிறந்தநாள் வைபவத்திலே கை குலுக்குகிறோம் அதுவே இறுதியாகச் சந்திப்போம் என்று எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் உன் உடல் சோர்ந்தே இருந்தது.

நினைத்துப் பார்க்கிறேன்.....

உலகெங்கும் வாழ் தமிழ் மக்களிடையே ஈழ விடுதலைப் போராட்டம் வீறு கொண்டு செயல்படத்தொடங்கிய காலம் தொட்டு அண்மைக் காலம் வரை உன்னோடு இணைந்து பணிபுரிந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேன்.

தமிழ்முரசின் தலைமகனாக இருந்து எழுபது புத்தகங்களில் உன் இலட்சியத் துடிப்புகளை கைப்பிரதி துவங்கி அச்சுப் பிரதிவரை உன் அழகான எழுத்துக்களால் ஆழமான கருத்துக்களை ஆணித்தரமாக எழுதிய உன் வலிமையை நினைத்துப் பார்க்கிறேன்.

பாலஸ்தீன விடுதலைப் போராட்டம், தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டம், நிக்கரகுவா போராட்டம், வியட்நாம் போராட்டம் என பல வகையான சர்வதேச விடுதலைப் பொராட்டங்களையும் நான் ஆங்கிலத்தில் படித்தவனல்ல. உன் தமிழ் எழுத்துக்களில்தான் படித்தேன்.


www.tamilarangam.net

இருபது வருடங்களுக்கு முன்னால் உலக அரசியலுக்குள் சிக்குப்பட்டுக் கிடக்கும் ஈழஅரசியல் பற்றி நீ எழுதியபோது உலக அரசியலுக்கும் ஈழஅரசியலுக்கும் என்ன சம்பந்தம் இதெல்லாம் தேவையா? எனஏளனம் செய்தவர்கள் இப்போது ஏற்றுக் கொள்கிறார்கள். நீ எழுதியது சத்தியம் என்று.

அராஜகத்தை அழித்து ஜனநாயகத்தை உருவாக்கி அனைத்து விடுதலையையும் வென்றெடுப்பதே ஈழமக்களின் போராட்டம் என இறுதிவரை எழுதினாய். அது அமெரிக்க ஏகாதிபத்தியமாக இருப்பினும், தமிழர் விடுதலைக்கூட்டணியாக இருப்பினும், விடுதலைப்புலிகளாக இருப்பினும், தான் சார்ந்த அமைப்பாக இருப்பினும் வெருட்டல்களுக்கும் மிரட்டல்களுக்கும் அஞ்சாதவனாய் எழுத்துக்களால் மட்டுமின்றி மேடைப் பேச்சாலும் உரக்கக் கூறினாய். உன் வீரத்தை நினைத்துப் பார்க்கிறேன்.
ஙநீ இந்த உலகத்தை விட்டு விடைபெறலாம். உன் இலட்சியம் ஒரு நாள் வெற்றிபெறும்.

உன் பிரிவு எமது ஆறாத்துயர். உன் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

*தோழர் தேவதாசன்.*






சங்கே முழங்கு நிகழ்ச்சியில் தோழர் உமா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வாழ்வாய் எம் நெஞ்சமெல்லாம்



நற்குடி பிறந்து வந்தாய்
நல்லதே நினைத்து நின்றாய்
பொன்பொருள் தேடிப் பின்னர்
பொருளையும் துறந்து நின்றாய்
தற்பெரும் புகழ்பேசா
தருக்காமை கொண்டு நின்றாய்
இப் புவி பிடிக்காதின்று
மறு புவி ஏகினாயோ?

கற்பனை வளர்த்து நின்றாய்
கவிநயம் பிறப்பில் கொண்டாய்
நித்திய அறிவும் கொண்டு
நித்திலம் விளங்க நின்றாய்
பற்பல கருத்தும் கூறும்
பான்மையை வளர்த்தும் நின்றாய்
இப் பெரும் மனிதன் நீயும்
இயற்கையில் கலந்ததென்ன

ஆண்மையும் அழகும் கொண்டாய்
அஞ்சுவது நெஞ்சில் கொள்ளாய்
பகைவரை பகடை செய்தாய்
கிளர்ச்சி கொள் கொள்கை தந்தாய்
ஈழத்துப் போரில் நல்ல
வலிமையைக் காட்ட நின்றாய்
தூணென நின்ற நீயும்
தூங்கியே போனதென்ன

நெருப்பினை நிலவு என்றாய்
நீசரை நம்பிச் சென்றாய்
கறுப்பினை வெண்மை என்றாய்
கழுதையை யானை என்றாய்
உருப்படாதவனை எல்லாம்
உயரத்தில் ஏற்றி வைத்தாய்
செருப்பையே மிதிக்கும் இந்த
தேசத்தில் நிறைந்து வாழ்ந்தாய்

வாழ்வாய் எம் நெஞ்சமெல்லாம்
நீடு நம் வாழ்விலென்றும்!

வதனி மஹால்
நண்பர்கள்

www.tamilarangam.net

# மாறாத மனிதன் ...



**1984**ம் ஆண்டு காலப்பகுதியில் இடதுசாரிச் சிந்தனைகளுடன் செற்பட்ட EPRLF அமைப்பால் ஈர்க்கப்பட்டு, அவ் அமைப்பிற்காக செயற்பட நானும் புறப்பட்டவேளையில் நண்பன் உமாகாந்தனின் பரீட்சயம் ஏற்பட்டது.

கால ஓட்டத்தையும், கருத்தியல் மாற்றங்களையும், மாற்றங்களுக்கான தேவைகளையும் கவனமாக்கி, எண்ணங்களையும் சிந்தனைகளையும், நானுட்பட பலர் மாற்றிக்கொண்டாலும் நண்பர் உமாகாந்தன் அவர்கள் இறுதிவரை எதிலும்மாறாத உறுதியுடன் வாழ்ந்து மடிந்திருக்கிறார்.

அனைத்து விடையங்களையும் அவதானமாக கிரகிக்கக்கூடிய இயல்பும் கிரகித்தவற்றை எழுத்துருவில் வடிக்கும் வல்லமையும் உமாகாந்தனுக்கே உரிய தனித்துவம்.

பரபரப்பாக வாழ்ந்நத ஒரு மனிதன் தனிமரமாக்கப்படும்போது எப்படி வெந்து, நொந்து,

www.tamilarangam.net

மாய்ந்து மடிவான் என்பதற்கு உதாரணமாகவேண்டிய ஓர் துர்ப்பாக்கியநிலை உமாகாந்தனுக்கு ஏற்படுமென எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

கருத்தியல் முரண்பாடுகளுக்கெல்லாம் அப்பால் நட்பியலுக்கு முக்கியம் கொடுத்து அனைவருடனும், அன்புடனும் பண்புடனும் பழகிய நண்பர் உமாகாந்தனின் மறைவு பலரின் வாழ்வியல் தேவைகளுக்கு மட்டுமல்ல விமர்சனநோக்கர்களுக்கும் ஏற்பட்ட இழப்பு என்பது எவரும் மறுக்காத உண்மை.

எங்கெங்கெல்லாம் படைப்புகள் படைக்கப்படுகின்றனவோ அவை எப்படியான படைப்புகளாக இருந்தாலும் அனைததையும் தேடி சேகரித்து தகவல்கள் அனைத்தையும் தெரிந்து, தெரிந்தவைற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து தேவையேற்படின் அவற்றைத் தொகுத்து வழங்கும் திறனுடன் வாழ்ந்தவர் நண்பர் உமாகாந்தன்.

பின்நாட்களில் தனிப்பட்டவாழ்வில் பல துன்பங்களையும், பொதுவாழ்வில் பல சேறடிப்புகளையும் இருட்டடிப்புகளையும் எதிர்கொண்டாலும் **மாறாத மனிதனாகவே** வாழ்ந்த நண்பர் உமாகாந்தனின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென வேண்டுவது தேவையற்றது. ஏனெனில் நிட்சயமாகவே அவர் சாந்தியடைவார் என்பது திண்ணம்.

ஆறாத் துயருடன்
**கோவை நந்தன்**

www.tamilarangam.net

# தனித்துவமான குரலொன்று ஓய்ந்தது...




சமூகம் பற்றிய சிந்தனையின்றி
சொந்த வாழ்வினுள்
மூழ்கிப்போன புலம்பெயர் தமிழ்
சமூகத்தில் ஈழமக்கள் புரட்சிகர
விடுதலை முன்னணியின் முக்கிய
செயற்பாட்டாளராக அரசியல் சமூகம்
சார்ந்த எழுத்துக்கள் மூலம்
எழுத்தாளனாய் கவிஞனாய் அரசியல்
விமர்சகராய் சஞ்சிகையாளனாய்
இவ்வுலகிற்கு உன்னை அடையாளம்
காட்டியவனே
இறுதிக் காலகட்டத்தில் நீ கலந்து
கொண்ட அமிர்தலிங்கம் பவளவிழா
மலர் வெளியீட்டு விழா மற்றும்
ஈழவிடுதலைப் போரில் எனது
சாட்சியம் வெளியீட்டு விழா
ஆகியவற்றில் நீ ஆற்றிய
உரைகளில் சமரசம் என்பதே
சரியான வாழ்வுமுறை என்றாகிவிட்ட
சமூகத்தில் தனித்துவமான குரலாக
ஒலித்தது இன்று உன் வாழ்வு
அஸ்தமித்துவிட்டாலும் உந்தன்
நினைவுகள் எம் உள்ளங்களில்
நிறைந்திருக்கும்.

நினைவுகளுடன்
உதயகுமார்

www.tamilarangam.net

# தோழனே! தமிழ்முரசே!




உமா!
எம் தோழனே!
தோழமையின் இலக்கணமே!
தோற்றுப்போகாத கருத்துகளின்
சொந்தக்காரனே!

நேற்றுவரைக்கும் நீ விட்டுச்சென்ற தெல்லாம்
வரையப்பட்டவேண்டிய வரலாறு,
ஆளுமையும், அசையாத நெஞ்சுரமும்
வாழுகின்ற எத்தனை பேர்க்கு
உனைப்போல் வசப்படும்!

அதனால்தானோ
'விலை போகாதவர்கள்' என்று
விரல்விட்டு எண்ணக்கூடிய
ஒரு சிலபேர்களில்
நீயம் ஒருவானாய்!

கவையும் இலக்கியமுமாய்க்
கரைந்த எம் காலங்கள்
காலத்தால் அழியுமோ
மாற்றுக் கருத்தினரையும்

www.tamilarangam.net

மனசால் நேசிப்பது பற்றி
மாறாதுரைப்பாய்,
மனங்களை வெற்றிகொள்ளத்
தெரிந்தவன் நீ
அதனால்தான்
விலகி ஓடிய வீதிகளிலெல்லாம் கூட
உன் காலடித்தடம்
கௌரவப்படுத்தப்பட்டது,

காலத்தால் பிரிந்தும்
மானசீகமாய்க் கைகோர்த்த
அதிசயம் நடந்தது

தொடராது விட்டாலும்
தோழமையின் சுகங்களை
அவ்வப்போது தொட்டுக் கொண்டோமே,

உடன்பட்டும், முரண்பட்டும்
முடிவில்லாது தர்க்கித்தும்
கவிதையாய்க் கழிந்த
காலங்கள் எத்தனை,

புகலிடச் சூழலில்
அரசியலில் அரிச்சுவடியை
முதன்முதலில்
உன் தமிழ்முரசு தானே
அறிமுகம் செய்தது

ஆசிரியத் தலையங்கமாய் - நீ
அதில் தீட்டிய அத்தனையும் உன்
அஞ்சாமை, துணிவுடமையின்
அழியாத சாட்சியங்கள்
மனித நேசம் பற்றி நீ
மறுபடி மறுபடி எழுதினாய் தோழனே!

www.tamilarangam.net

எழுதவும், எம் கருத்தை
எடுத்துச் சொல்லவும்
முடியுமானதொரு சூழலை உருவாக்க
முன்னின்றுழைத்தவன் நீ!

சமரசம் என்பது உன்
சரித்தரத்தில் கிடையாது
உறுதியும், நேர்மையும்
உன் கூடப் பிறந்தவை அல்லவா!

உன்னிடத்தில் நாங்கள்
கற்றுக்கொண்டது ஏராளம்,

இன்றோ ஒரு வெற்றிடம்
நீ இல்லையே,
நெஞ்சு கனக்கிறது தோழனே,

உண்மையாகவே நீ இல்லையா?
ஏன், என்ன நடந்தது,

ஆயிரம் அர்த்தங்கள் இருப்பினும்
மரணத்தைவிட வாழ்வு சிறந்தது
என்பதை
அர்த்தத்தோடு உரைப்பாயே
எங்கு சென்றாய்?
நீ மறைந்து போனவனா? இல்லையே
எம் மனங்களில் நிற்கும்
மந்திரம் தெரிந்தவனல்லவா!

தோழனே!
உன் இழப்பினை அறிவித்த
சுவரொட்டி விளம்பரங்களெல்லாம்
இங்கு
ஓரிரவுக்குள் கிழித்து


தமிழ் முரசு
THAMIL MURASU
வன்முறையா? சீச்சி!
செய் அல்லது செத்துமடி

www.tamilarangam.net

அப்புறப்படுத்துப்பட்டதை அறிந்த போதுதான்
நீ எத்தனை பெரிய மனிதன் என்பதும்
நீ எத்தனை பேருக்குச்
சிம்ம சொற்பனமாய் இருந்திருக்கிறாய் - இன்னும்
இருக்கிறாய் என்பதும் நிருபணமாகிறது.
மரணத்தைக்கண்டு அஞ்சியவனல்ல நீ
மாறாக
உண்மையைச் சுமந்தாய்
உண்மையைச் சுவாசித்தாய்,
மாபெரும் கலைஞர்களும்,
அறிஞர்களும் புரட்சிவாதிகளும்
விதையாகிப்போன இந்தமண்ணில்

அந்த வரலாற்றின்
முடியாத தொடர்ச்சியாக நீயும்..

கூடவே
நாம் இன்று உன்னையும் சுமக்கிறோம்,
காலம் உள்ளவரை...
என்றோ ஓர் நாள் - மண்ணில்
மானுட நேசம் மலரும் போது
உன் நினைவுக்கும் அப்போது
முழு அர்த்தம் கிடைக்கும்.



உன் தோழன்
அருந்ததி.

www.tamilarangam.net



## தி. உமாகாந்தன்

**16. 03. 1956 - 28. 09. 2004**

மரணம் என்பது வாழ்க்கையின் பாரிய இழப்பல்ல. பாரிய இழப்பென்பது ஒருவர் வாழும்போது அவருக்குள் மரிப்பவைகளே.

**உயிர்நிழல்**
எக்ஸில் வெளியீடு
27 Rue Jean Moulin
92400 courbevoie.

www.tamilarangam.net

## மக்களின் நலன்களை முன்வைக்காத போராட்டங்கள் முதல் தியாகங்கள் வரை விதிவிலக்கு இன்றி (அரசியல்) அனாதைகளையே உருவாக்கின்றது

பொதுவான சமூக சூழல் ஜனநாயகத்தை ஆதாரமாக கொள்ளாத வரை, ஒரு மனிதன் சரியான பாதைக்கு திரும்பி வரும் சூழலை உருவாக்காதவரை, மக்களின் நலன்களை முதன்மைப்படுத்திய அரசியலை முன்வைக்காத வரை, பிற்போக்கான நடைமுறைகளையும் அந்த அரசியலையும் விமர்சிக்கும் தகுதி யாருக்கும் கிடையாது.

இன்று கொலைகளே அனைத்துக்குமான சமூகத் தீர்வாகிப் போன தமிழ்சூழலில், அதை இரசித்தும் ஆதரித்தும் வக்கரிக்கும் தமிழ்சமூகத்தில், சமூக அக்கறையுள்ள ஒருவனின் தவறான பாதைகளை விமர்ச்சித்து திருத்தமுடியாது சமூகமே வக்கற்றுப் போகின்றது. இங்கு தனிமனிதனின் தவறுகளை மட்டும், நாம் தனித்து விமர்சிக்க முடியாது. கொலைக் கலாச்சாரத்தை அடிப்படையாக கொண்ட தமிழ் சமூக அடித்தளத்தையே விமர்சிக்க வேண்டியுள்ளது.

இதனடிப்படையில் சமூகத்தின் நலன்களுடன் தம்மை இனைத்துக் கொண்டு, பொது வாழ்வில் ஈடுபடுபவர்களின் வாழ்வு என்பது எப்போதும் கேள்விக்குள்ளாக்கக் கூடியவைதான். இந்த கேள்விக்குள்ளாக்கல் அனைத்தும், மக்களின் வாழ்க்கையுடன் அவர்கள் எந்தளவுக்கு இணங்கிப் போனார்கள், போகின்றனர் என்பதையே அடிப்படையாக கொண்டது.

அண்மையில் உமாகாந்தன் இயற்கையாகவே மரணம் அடைந்துள்ளர். சோக்கையாக கொல்லப்படாத ஒரு சூழலில், மரணத்தின் பின் பற்பல தூற்றுதல்கள் மூலம் பலமுறை சேர்க்கையாகவே வதந்திகள் மூலம் கொல்ல முனைகின்றனர். உமாகாந்தன் கடந்த முப்பது வருடங்கள் சளையாது ஒரு பொதுவாழ்வில் தன்னை இணைத்துக் கொண்டவர். இந்தப் பொதுவாழ்வு சில பக்கங்கள் ஏற்றுக் கொள்ளமுடியாத பல கரடுமுரடான பாதையூடாவே நகர்ந்தது. மிகக் கடுமையான விமர்சனத்துக்குரிய அரசில் வழிகளை கூட அவர் பின்பற்றி இருந்தார். அவரின் அரசியலுடன் என்றுமே நான் உடன்பட்டது கிடையாது. கடுமையான நேரடி

www.tamilarangam.net

விமர்சனங்களை விவாதம் உடாக நான் முன்வைத்தவன். இதனால் எனது நூல்களையும், எழுத்துகளையும் படிக்க ஆர்வம் கொண்டு அவற்றை பெறுவதில் எப்போதும் அக்கறையாக இருந்தார். படித்தார். நூல்களை பணம் கொடுத்து வாங்கிப் படிக்கும் ஒரு எழுத்தளராக விமர்சகராக இருந்தார்.

எனது விமர்சனங்களின் போது நான் இன்று வைக்கும் எனது கருத்தை என்றும் மறுத்ததுகிடையாது. சரியென்று எற்றுக் கொண்ட போதும், நடைமுறையில் அதை முன்னெடுக்காத ஒருவராகவே இருந்தார். அவர் சார்ந்த இயக்கத்தை ஜனநாயக விரோதிகள் அழித்தபோது, எற்பட்ட அதிருப்தி சமூக நம்பிக்கையீனமாக மாறியது. மக்கள் பற்றி அதீதமான நம்பிக்கையீனத்துடன் இருந்ததால், பொதுவான ஜனநாயக விரோதப் போக்கு எதிரானதும், மக்களுடன் இணங்கி நிற்காத எதிராணியுடன் தன்னை எப்போதும் இனங்காட்டினார். இந்த இடத்தில் அவரின் சமூகம் மீதான நம்பிக்கையீனம், பொதுவான புறச்சூழலில் இருந்து உருவாகின்றது. மக்களின் நலன் என்ற உன்னதமான சமூக நோக்கத்துடன் இயங்கும் இயங்கு சக்திகளை அரவனைத்துச் செல்லும், பொதுவான ஜனநாயகச் சூழல்யின்மை பலரை தவறான பாதைக்கு வழிகாட்டிவிடுகின்றது. மாற்றுக் கருத்தை துரோகமாக மட்டும் முத்திரை குத்தும் பொதுச் சமூகக் கண்ணோட்டம், மாற்றுக் கருத்து உள்ளவர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்ற பட்டியலில் இனைக்கும் போது, பலரை தவறான அரசியல் பக்கம் பலாக்காரமாகவே தள்ளிவிடுகின்றது.

இந்த பொதுவான ஜனநாயக விரோதச் சூழல் இருப்பாதால், மக்களுக்கு எதிரான சக்திகளுடன் கைகோர்த்து நிற்பதை யாரும் நியாயப்படுத்த முடியாது. எப்படி மக்களுக்கு எதிரான ஜனநாயக விரோதிகளுடன் இனைத்து நாம் நிற்க முடியாதோ, அதே போல் தான் மக்களுக்கு எதிரான சத்திகளுடனும் நாம் இனைந்து நிற்பதை எற்றுக் கொள்ளமுடியாது.

மக்களுக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்து, தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை அழித்துக் கொண்டவர்கள் பல ஆயிரமாக இச்சமூகத்தில் உள்ளனர். ஆனால் இவர்கள் மக்களின் நலனை சரியாக இனம் காணமுடியாதவர்களாகவே அழிந்துபோகின்றனர். இது தியாகத்தின் பெயரில் நடந்தாலும் சரி, ஜனநாயத்தின் பெயரில் நடந்தாலும் சரி, மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளில் இருந்து அன்னியமாகி முடிவற்று தொடருகின்றது. இன்று புறச்சூழல் சார்ந்து பொதுவான அரசியல் நீரோட்டத்தில், எதிரிணியாக தம்மைக் கூறிக் கொள்ளும் இரண்டு மக்கள் விரோத அணி சார்ந்தே இவை நடக்கின்றது.

இந்த வகையில் தான் உமாகாந்தனின் வாழ்வும். தனது மரணத்தக்கு முந்திய வருடங்களில் மாற்று இலக்கிய போக்குடன் தன்னை அடையாளப்படுத்திய இவர், ஆரம்பத்தில் பொதுவான தமிழ் தேசிய எழுச்சியுடன், தன்னை இனம் காட்டி சிங்கள இனவாதிகளுக்கு எதிராக பாரிசில் பல போராட்டங்களை முன்னெடுத்தவர். பின்னால் அரசியல் நிலைப்பாடு சார்ந்து தன்னை ஈ.பி.ஆர்.எல்.எப் உடன் இணைத்துக் கொண்டவர். இவ் இயக்கம் பல மறுபட்ட காலகட்டத்தின் ஊடாகவே நகர்ந்து

www.tamilarangam.net

போது, மாறி வந்த அரசில் அதிர்வுகளில் இருந்து இறுதி காலம் தவிர்ந்த மற்றைய காலத்தில் கூட தன்னை விலக்கிவிடவில்லை. இவ்வியக்கம் தமிழ் மக்களை சார்ந்து நின்ற காலகட்டத்திலும், மற்றவர்களின் கைப்பொம்மையாக இருந்த காலத்திலும் கூட, இவர் அவர்களுடன் இனைந்து நின்றார்.

மக்களுக்காக மக்களுடன் இனைந்து நின்று போராடிய காலம் பல்வேறு விமர்சனங்களை கொண்ட போது எவ்வளவு முற்போக்கானதாக இருந்ததோ, அதேபோல் மக்கள் அல்லாத சக்திகளின் எடுபிடிகளாக இனைந்து நின்ற காலமும் பிற்போனது தான். இங்கு பொதுவான ஜனநாயக மறுப்புக்கு எதிரான ஒரு தலைப்பட்சமான குரல் என்பதை மட்டும் அளவீடாக கொண்டு, ஒருவரை மதிப்பிட்டுவிட முடியாது. எதிர்மறையில் இதேபோல் தேசிய விடுதலைப் போராட்டத்தை மட்டும் அடிப்படையாக கொண்டு ஒருவரை மதிப்பிட முடியாது. இன்று எல்லா பிரச்சனையிலும் முந்திய பிந்திய என இரு காலகட்டத்தை வேறக்கி, தனித் தனியாகவே பார்க்கவேண்டியுள்ளது. மக்களுடன் இணங்கி நின்ற காலகட்டத்தில், உமாகாந்தனின் சமூகப் பங்களிப்பு மதிப்புக்குரிய ஒன்றாகவே இருந்தது. மற்றைய பக்கம் கடும் விமர்சனத்துக்குரியதே. இங்கும் பொதுவான சூழல் ஜனநாயகத்தை ஆதாரமாக கொள்ளாத வரை, ஒரு மனிதனின் சரியான பாதைக்கு திரும்பி வரும் சூழலை உருவாக்காதவரை, மக்களின் நலனை முதன்மைப்படுத்திய அரசியலை முன்வைக்காத வரை, பிற்போக்கான நடைமுறைகளை விமர்சிக்கும் தகுதி யாருக்கும் கிடையாது.

மக்களுடன் அவர் இணங்கி நின்ற காலத்திலும், பின்னாலும் அவர் முன்வைத்த பல கருத்துகள் பொதுஅறிவு மட்டத்தைக் கடந்து காணப்பட்டது. அவை மக்களின் அறிவை மற்றும் சிந்தனைத் திறனை எற்படுத்தும் அடிப்படையை கொண்டிருந்தது. ஆனால் அவரின் அரசியலால் வரையறுக்கப்பட்ட எழுத்து எல்லை, (அரசியல்) அனாதைகளுக்குரிய வரையறைக்கு உட்பட்டே காணப்பட்டது. உமாகாந்தனின் கடும் உழைப்புடன் கூடிய தியாக உணர்வு எற்படுத்திய மரணம் எமக்கு உணர்த்தி நிற்பது இதைத்தான்.

சமர் சார்பாக
இரயாகரன்



www.tamilarangam.net

# ஆதிக்க சக்திகளுடன் சமரசம் செய்து கொள்ளாதவர் தோழர் உமாகாந்தன்

மனிதர்கள் பிறக்கிறார்கள், வாழ்கிறார்கள், இறக்கிறார்கள். வாழ்ந்தவர் கோடி மறைந்தவர்கோடி மக்களின் மனதில் நிற்பவர் யார்?
உலகையே வெல்கின்றேன் என்று கர்ச்சித்த சர்வாதிகாரிகளெல்லாம் இன்று மண்ணோடு மண்ணாகி போய்விட்டநிலை நம் கண்ணெதிரே.
ஆனால் அதிகாரபீடங்களை எதிர்த்து நின்ற எழுத்தாளர்களெல்லாம் தங்கள் எழுத்துக்களூடு இன்றும் மக்களுடன் வாழ்கிறார்கள். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வதெல்லாம் என்ன?
ஒரு மனிதன் மனுசி எவ்வளவு காலம் வாழ்ந்தான்/ள் என்பது முக்கியமல்ல. அவன்/ள்
எப்படி வாழ்ந்தான்/ள் என்பதுவே முக்கியம்.
இந்த வகையில் இன்று மறைந்துவிட்ட நமது தோழர் உமாகாந்தனும் முக்கியத்துவம் பெறுகிறார். தனது அரசியல் வாழ்வில் என்றும் சமரசம் செய்யாது மக்கள் விரோத அரசியல் செயற்பாடுகளை தொடர்ந்து எதிர்த்துவந்தவர் அவர்.
படித்தவனெல்லாம் பதவிகளுக்காகவும், பணக்காரனெல்லாம் பக்குவமான வாழ்வைப்பேணவும் கொலைவெறியையும் குருரங்களையும் கும்பிட்டுப்பூசிக்கும் நிலையில் வந்து நிற்கிறது நமது இனம். முழுத் தமிழ்சமூகமே பாசிசமாகிப்போன சூழலில் எஞ்சி நின்று எதிர்த்துக்குரல் கொடுப்போர் இன்று மிகச் சொற்பனரே. இந்நிலையில் இந்தப்பாசிச எதிரணியில் தன்னை பலமாக பிணைத்துக்கொண்டவர் தோழர் உமாகாந்தன்.


அவர் தனது அரசியல் வாழ்வில் சுமார் பத்துவருடங்களை தமிழ்மக்களின் விடுதலையை வென்றெடுக்கும் விதமாக போராட்டக்களத்தில் நின்ற ஈழமக்கள்

www.tamilarangam.net

புரட்சிகரவிடுதலைமுன்னணியில் செலவிட்டார். புகலிட வாழ்வில் ஆரம்பகால பத்திரிகையான தமிழ் முரசினை தொடர்ந்தேச்சியாக நடாத்துவதில் முக்கிய பங்கு வகித்துவந்தார். தமிழ்த்தேசத்தின் விடுதலை என்பது உழைக்கும் மக்களின் தலைமையில் வென்றெடுக்கப்படவேண்டுமென்று கடுமையாக உழைத்தவர்களில் உமாகாந்தனும் ஒருவர். ஆனால் தமிழர் போராட்டமென்பது திக்குத்திலைகெட்டு குரங்கு கை பூமாலையாய் போய்விட்டது. இந்நிலையில் இந்த அர்த்தமற்ற போர் நிறுத்தப்படவேண்டுமென குரல் கொடுப்பதில் முன்னின்றார்.
இனியும் சூல்கொள், இருள்வெளி என்று எமது தோழர்களோடு இணைந்து பாரிசில் எதிர்ப்புத் தொகுப்புகளை வெளிக்கொணர பாடுபட்டார். தொடர்ந்தும் எக்ஸில், உயிர்நிழல் என எழுத்துப்போர் இறுதிவரை தொடர்ந்தது. தமிழ்ச்சூழலில் எல்லா புத்திஜீவிகளும் அதிகாரபீடங்களின் காலடிகளில் சரணாகதி அடைந்துவிட்ட நிலையில் மிகச்சொற்பமாகவே எஞ்சிநின்ற தர்மம்மிக்க மனிதர்களில் தோழர் உமாகாந்தனும் ஒருவராக இருந்தார்.

இன்று நாம் எதிர்கொண்ட அவரது இழப்பு இவ்வாறே உணரப்படவேண்டும். யாராவது அவருக்கு அஞ்சலி செய்வதானால் ஆதிக்க சக்திகளுடன் சமரசம் செய்யாப்போக்கினை தொடர்வதினூடே அது சாத்தியமாகும்

**எக்ஸில்**



www.tamilarangam.net

# மீண்டும் சந்திப்போம்



என்னருமைத் தோழனே!
உன் காந்தத்தின் ஈர்ப்பில்
சங்கே முழங்கியது.

போர்ப்பறை கொட்டும்
நேரிய பேச்சு
நெற்றிப் பொட்டில்
உற்றுப் பார்க்கும்-உன்
கூர்ந்த ஞானம்

மரத்துப் போன
மனங்கள் கூட-கரை
உடைத்துப் பாயும்-உனைக்
காணும் கணங்களில்
ஏனெனில்....
நீ, மடை திறந்த வெள்ளம்

உமா!
தோற்றத்தால் மட்டுமே
நிமிர்ந்தவனல்ல-நீ
சமுதாயம் மாற்றம் காண
கரும்பனையாய் உயர்ந்தவன்

நண்பனே!
மண் விட்டு மறையலாம்
ஆனால்.. ..
எம் மனம் தொட்டுச்
சொல்லுகிறோம்,

கருக்குத் தரித்த-உன்
வரிச்சுக் கருத்துக்கள்
தளிர்விடும் துளிர்களின்
கைகளில்-இனி
அரிச்சுவடியாய்
ஆரம்பமாகும்.

மீண்டும் வா
உன் வருகையை
ஆவலோடு எதிர்பார்க்கும்

தோழன்
**தி. சாம்சன்**

www.tamilarangam.net

# இன்றுபோய் நாளைவா

அப்போ அந்தக் கட்டிடக் காட்டுக்குள்
நான் ஆறிநின்ற நிழல் நீ
மத்தளம் கொட்ட
வரிசங்கம் நின்றூத
சங்கே முழங்கென
நீ..
மகிமையோடு இருந்த காலங்கள் அவை
உன் தலை மீது எண்ணை பூசி
பந்தி நடுவே உட்காரவைத்து
இறைவன் ஆசீர்வதித்தநாட்கள்

இந்த துன்பம் பெரிதென நினைக்க
அலையைக் கலைத்துவரும் அலைபோல்
அதைவிட பெரிய துன்பங்கள் தொடர்ந்தன
சோராமல் நடந்தாய்
இடர்தரும் தொல்லை இனிமேல்
இல்லை இல்லை எனச்சொல்வாய்
வன்முறை அறியாய்
வன்சொல் சொல்லாய்
புறம் பேசாய்
பொய் குறைவாய்
அன்பென்று கொட்டினாய் முரசு



விபரமறியா உன் சிறுமகனை
காந்தன் இல்லாக் குகனை
நினைத்தால் கண் கலங்கும்
நீர்க்கோல வாழ்வில்
நீ பட்ட துயரறிய
மனமுருகும்

பஞ்சிபடா நூலே
பலர் நெருடா பாவே
பாரிஸில் முரசறைந்த தமிழே
போய்விட்டு வா நண்பா.

காலம் செல்வம்
(கனடா)

www.tamilarangam.net

www.tamilarangam.net



1984ம் ஆண்டு இலங்கைத்தூதராலயத்தின் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது
தோழர் உமாகாந்தன்...



'யுத்தம் யாருடனும் செய்யலாம்
புத்தகம் யாரும் வெளியிடலாம்
ஆனால் எழுத்து எந்த நேரமும்
இறுக்கமாக இதயத்தில் இருக்கும்'
எமது தோழர்கள் எமது நண்பர்கள் அப்படித்தான்'

தோழர். உமாகாந்தனின் கடைசிவரிகள்